# தொப்புள் கொடி உறவுகளைத் தொட்டில் கட்டித் தாலாட்டிய தாயுள்ளத் தலைவர்!



**கோவி.லெனின்**
கழக தகவல்
தொழில் நுட்ப அணி
ஆலோசகர்,

**சி**லப்பதிகாரத்தில் கோவலனும் கண்ணகியும் தங்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட நெருக்கடியை சமாளிக்க சொந்த ஊரான சோழ நாட்டின் பூம்புகாரை விட்டு பாண்டிய நாட்டின் மதுரைக்குச் செல்கின்றனர். அப்போது மதுரையின் மதில்களில் கொடிகள் பறப்பதை அவர்கள் பார்க்கிறார்கள். அதை இளங்கோவடிகள் மிக நுட்பமாக, தற்குறிப்பேற்ற அணியில் விவரிக்கிறார்.

**போருழந்தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி**
**வாரலென்பனபோல் மறித்துக் கைக்காட்ட**

கோவலனையும் கண்ணகியையும், “வராதீங்க.. வராதீங்க” என்று அவர்களைத் தடுப்பது போல, மதில்களில் பறக்கின்ற கொடிகள் அசைந்தனவாம்.

இலங்கையில் நடந்த இனப்போராட்டத்தினால் 1983ஆம் ஆண்டு முதல் ஈழத் தமிழர்கள் தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக, அனுமதியில்லாத படகுகளில் கூட்டம் கூட்டமாக ஏறி, நள்ளிரவில் நடுக்கடல் தாண்டி, தமிழ்நாட்டின் இராமேஸ்வரம் கடற்கரைக்கு வந்து சேர்ந்துபோது, கடல் அலைகளின் ஓசையும், சிலப்பதிகார எச்சரிக்கைப் போலத்தான் இருந்தது. ஆனாலும், கண்ணகியும் கோவலனும் பாண்டிய நாட்டை நம்பியது போல, தமிழ்நாட்டை நம்பி வந்தனர் ஈழத் தமிழர்கள்.

தமிழ்நாட்டில் உள்ள முகாம்களில் 40 ஆண்டுகளுக்கும் மேலாக வாழ்கின்ற இலங்கைத் தமிழர்களுக்கும், இங்கேயே பிறந்துவளர்ந்து படித்துதிருமணமான அவர்களின் வாரிசுகளுக்கும் இந்தியக் குடியுரிமை கிடைக்கவில்லை. சொந்த நாட்டுக்கும் திரும்பிச் செல்ல முடியவில்லை. நாடற்றவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ்நாட்டில் உள்ள இலங்கைத் தமிழர்களைப் பற்றி மூத்த பத்திரிகையாளர் முனைவர் ஆர்.கே.ராதாகிருஷ்ணன் Faceless PeopleThe Journey of Tamil Refugees in India என்ற தலைப்பில் இயக்கியுள்ள ஆவணப்படத்தைப் பார்வையிட்ட கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள், பத்திரிகையாளர் ஆர்.கே. ராதாகிருஷ்ணனையும் அவர் உருவாக்கியுள்ள ஆவணப்படத்தின் உணர்வுப்பூர்வமானத் தன்மையையும் குறிப்பிட்டு, தன் சமூக வலை தளப் பக்கத்தில் பதிவு செய்திருந்தார்.

மே 17 இயக்கத்தின் நிறுவனரான தோழர் திருமுருகன் காந்தி அவர்கள் இதனை விமர்சித்து சமூக வலைத்தளங்களில் பதிவிட்டிருந்தார். தி இந்து ஆங்கில நாளேட்டின் முன்னாள் ஆசிரியர் என்.ராம், அந்த நாளேட்டின் சார்பில் இலங்கையிலிருந்து செய்திக் கட்டுரைகளை எழுதிய ஆர்.கே.ராதாகிருஷ்ணன் இருவரும் இலங்கைப் பிரச்சினையில் அங்குள்ள தமிழர்களுக்கு எதிராகவும், விடுதலைப் புலிகளுக்கு எதிராகவும் தொடர்ந்து செய்திகளை வெளியிட்டவர்கள். அவர்களைத் தி.மு.க. தலைமை ஆதரிப்பதைக் கண்டிப்பதாக அவரது பதிவு உள்ளது.

**கழகத் தலைவர் கலந்து கொண்ட ஆவணப்படத் திரையிடல் என்பது இலங்கையில் நடந்த இனப் போராட்டம் குறித்ததல்ல. அந்தப் போராட்டத்தினால் சிங்கள இராணுவத்தின் கொடூரத்தை எதிர்கொள்ள முடியாமலும், போராளிக் குழுக்கள் தரப்பின் நெருக்கடியினாலும் தமிழ்நாட்டுக்கு வந்த இலங்கைத் தமிழர்களின் நாடற்ற வாழ்க்கை குறித்த தாகும். அவர்களின் வாழ்க்கையில் அக்கறை கொண்ட எவரும், கழகத் தலைவர் தலைமையில் 5 ஆண்டுகாலம் நடைப்பெற்ற திராவிட மாடல் ஆட்சியில், தமிழ்நாட்டில் உள்ள இலங்கைத் தமிழர் முகாம் களில் வாழும் மக்களின் மேம்பாட்டிற்கு எடுத்த நடவடிக்கைகளைப் பாராட்டவே செய்வார்கள்.**

கழகத் தலைவர் தன்னுடைய சமூக வலை தளப் பதிவில், “தற்போதைய அரசும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் மக்களுக்காகத் திராவிட மாடல் அரசு மேற்கொண்ட திட்டங்களைத் தொய்வின்றித் தொடர்ந்து நிறைவேற்ற வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்“ என்று தெரிவித்திருந்தார். ஏன் இந்த வலியுறுத்தல்?

தமிழ்நாட்டில் இலங்கைத் தமிழர்கள் தங்க வைக்கப்பட்டிருந்த முகாம்கள் ஒரு காலத்தில் எப்படி இருந்தன என்பதை ஏறத்தாழ 20 ஆண்டுகளாக இந்த முகாம்களை ஆய்வு செய்து செய்திக் கட்டுரைகளும், அந்த ஆய்வின் அடிப்படையில் முனைவர் பட்டமும் பெற்று, இப்போது ஆவணப்படமும் இயக்கியுள்ள பத்திரிகையாளர் ஆர்.கே.ராதாகிருஷ்ணன் உள்ளிட்ட பலரும் அறிவார்கள். 2006ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சிக்காலத்தில்தான் அந்த முகாம்கள் மீது அரசாங்கத்தின் பார்வை வெளிச்சம் பட்டது. அப்போதைய சட்டமன்ற உறுப்பினரான விடுதலை சிறுத்தைக் கட்சிகளின் பொதுச்செயலாளர் ரவிக்குமார் எம்.பி.யும் மற்றவர்களும் முகாம்களின் நிலைமை குறித்து அளித்த ஆய்வறிக்கையினைப் பார்த்து, முகாம் மக்களின் அடிப்படைத் தேவைகள் கலைஞர் அரசால் நிறைவேற்றப்பட்டன.

அதன்பின்னர், **2021ல் திராவிட மாடல் ஆட்சி அமைந்தபிறகே தமிழ்நாட்டில் வாழும் இலங்கைத் தமிழர்களின் நலன் மீது தனிக் கவனம் செலுத்தப் பட்டது. இலங்கை அகதிகள் முகாம் என்ற பெயரை, இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம் என மாற்றம் செய்ததுடன், அது பெயரளவிலான மாற்றமாக இல்லாமல், உண்மையான மறுவாழ்வுக்கான அனைத்துத் திட்டங்களையும் நிறைவேற்ற முதல் கட்டமாக 300 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியவர் முதலமைச்சராக இருந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள்.**

மறுவாழ்வு முகாம்க ளுக்கான அடிப்படைக் கட்டமைப்புகளான வீடுகள், கல்வி உதவி, வேலைவாய்ப்புக்கான திறன் பயிற்சி, மாதாந்திர பணக் கொடை, பாத்திரங்கள், துணிமணிகள் ஆகியவற்றுடன் தமிழ்நாட்டில் ரேஷன் கார்டுகள் வைத்திருப்பவர்களுக்கு வழங்கப்படும் 20 கிலோ அரிசி, பொங்கல் பரிசுத் தொகை, கொரோனா பேரிடர் கால நிவாரணம் 4000 ரூபாய், கலைஞர் மகளிர் உரிமைத் தொகையாக மாதம் 1000 ரூபாய், இவற்றுடன் சமையல் எரிவாயு சிலிண்டர்கள், மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் ஆகியவற்றையும் வழங்கியது திராவிட மாடல் அரசு.

2021ஆம் ஆண்டு நவம்பர் 2ஆம் நாள் வேலூர் மாவட்டம் மேலமொணவூர் என்ற இடத்தில் உள்ள இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமில் இந்தத் திட்டங்களை முதலமைச்சராகக் கழகத் தலைவர் அவர்களே முன்னின்று தொடங்கி வைத்து, முகாம்களின் தகரக் கொட்டகை வீடுகளில் வசித்து வந்த மக்களின் வாழ்க்கை நிலையையும் நேரில் பார்த்தார். தமிழ்நாடு அரசின் மறுவாழ்வுத் துறை மூலமாக இலங்கைத் தமிழர்களின் நிலையை மாற்றுவதற்கானத் திட்டங்களை செயல்படுத்தியதுடன், அதன் சிறப்பான செயல்பாடுகளுக்கான கூடுதல் பலமாக, ‘இலங்கைத் தமிழர் நலன் ஆலோசனைக் குழு’ ஒன்றையும் துறையின் அமைச்சர் தலைமையில் அமைத்தார். அந்தக் குழுவில் நானும் ஓர் உறுப்பினர் என்ற முறையில், கடந்த 5 ஆண்டுகளில் திராவிட மாடல் ஆட்சியில் இலங்கைத் தமிழர்கள் மறுவாழ்வு முகாம்களில் ஏற்பட்ட மறுமலர்ச்சியை நேரில் காணும் வாய்ப்பு அமைந்தது.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிவகங்கை மாவட்டம், சிவகங்கை வட்டம், ஒக்கூர் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமிற்கு நேரில் சென்று, அங்கு தங்கியுள்ள இலங்கை தமிழர்களிடம் அவர்களுக்கு செய்து தரப்பட்டுள்ள வசதிகள் குறித்தும், அவர்களது தேவைகள் குறித்தும் கேட்டறிந்தார். இந்த ஆய்வின்போது, கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர். (கோப்பு படம் 22.01.2025)

**2023ஆம் ஆண்டு செப்டம்பர் 17ஆம் நாளன்று அதே வேலூர் மாவட்டம் மேலமொணவூரில் உள்ள மறுவாழ்வு முகாமில் புதிதாகக் கட்டப்பட்ட தனித் தனி வீடுகளை அங்கு வாழும் இலங்கைத் தமிழர் குடும்பங்களிடம் நேரில் ஒப்படைத்தார் அன்றைய முதலமைச்சரான கழகத் தலை வர். தமிழ்நாட்டில் உள்ள 103 மறுவாழ்வு முகாம்க ளில் கடந்த 5 ஆண்டுகளில் ஏறத்தாழ 7000 புதிய வீடுகள் கட்டி வழங்கப்பட்டுள்ளன. அதில் உள்ள ஒவ்வொரு குடும்பத்தின் தலைவர் அல்லது தலைவிக்கு மாதம் 1500 ரூபாய், குடும்பத்தில் உள்ள பெரியவர்களுக்கு மாதம் 1000 ரூபாய், குழந்தைகளுக்கு மாதம் 500 ரூபாய் என பணக் கொடையை உயர்த்தி வழங்கியதும் திராவிட மாடல் அரசுதான். வேலைக்காக முகாம்களை விட்டு வெளியே செல்பவர்களுக்கு காவல் கண்காணிப்புக் கட்டுப்பாடுகளில் தளர்வு உள்ளிட்ட வாழ்வாதார மேம்பாட்டுப் பணிகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டதுடன், அவர்களின் நெடுங்காலக் கோரிக்கையும்வாழ்வுரிமைக்கு அடிப்படையுமான குடியுரிமை பெறுவதற்கான வழிமுறைகளும் சட்டப்பூர்வமான வழியில் மேற்கொள்ளப்பட்டன.**

ஒன்றிய பா.ஜ.க அரசின் சி.ஏ.ஏ திருத்தச் சட்டத்தில் அண்டை நாடுகளிலிருந்து வந்தவர்கள் தொடர்பான குடியுரிமையில், இலங்கைத் தமிழர்கள் ஏன் சேர்க்கவில்லை என நாடாளுமன்றத்தில் முதல் குரல் எழுப்பியவர் தி.மு.க. மாநிலங்களவைக் குழுத் தலைவரான திருச்சி சிவா எம்.பி. அவர்கள். தமிழ்நாடு அரசின் இலங்கைத் தமிழர் நலன் ஆலோசனைக் குழுவின் துணைத் தலைவரான டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. மக்களவையில் இதற்காகக் குரல் கொடுத்தார்.

கழகத்தின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி., இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வாழும் மக்களுக்காகத் தொடர்ந்து குரல் எழுப்புவதுடன், ஒன்றிய பா.ஜ.க. அரசு இந்தியாவில் உள்ள அகதிகள் தொடர்பாக விதித்த புதிய சட்டவிதிகளை முன்வைத்து, நாடாளுமன்றத்தில் உள்துறை அமைச்சர் அமித்ஷாவிடம் நேருக்கு நேராகவே, தமிழ்நாட்டில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்கான குடியுரிமையை வலியுறுத்தினார். குடியுரிமை தொடர்பாக, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. மூத்த வழக்கறிஞர் வில்சன் எம்.பி. அவர்கள் இந்த வழக்கினை நடத்தி வருகிறார்.

தமிழ்நாடு அரசின் இலங்கைத் தமிழர் நலன் ஆலோசனைக் குழு உறுப்பினர்களான சட்ட வல்லுநர் மனுராஜ், ஐ.நா.வின் அகதிகள் உயர் ஆணையத்தின் சென்னை கள அலுவலர் வளன் சச்சிதானந்தம், பேராசிரியர்கள் இளம்பரிதி, பாரிவேலன் உள்ளிட்டோர் கொண்ட குழு, முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழர்களில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர்கள் தொடர்பான ஆதாரங்களையும், இந்தியாவிலேயே பிறந்து வளர்ந்த முகாம் வாழ் மக்கள் பற்றிய விவரங்களையும் சேகரித்து அவர்களுக்கு குடியுரிமை வழங்குவதற்கான சாத்தியக் கூறுகள் குறித்த இடைக்கால அறிக்கையையும் வழங்கியுள்ளது.

திராவிட மாடல் அரசின் சட்ட உதவியுடன், வழக்கறிஞர் ரோமியோ அவர்கள் முன்னெடுப்பில் முதன் முதலாக, திருச்சி கொட்டப்பட்டு இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமில் வசிக்கும் நளினி என்பவருக்கு இந்திய பாஸ்போர்ட் வழங்கிட சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை உத்தரவிட்டது. இதன் மூலமாக, அவருக்கு இந்தியக் குடியுரிமை உறுதியானதுடன், கடந்த 2024 நாடாளுமன்றத் தேர்தலில் வாக்காளர் அடையாள அட்டையும் கிடைக்கப்பெற்று, தேர்தலில் வாக்களிக்கவும் செய்தார்.

**திராவிட மாடல் அரசின் தொடர்ச்சியான சட்ட உதவிகள் மூலம், 2026 சட்டமன்றத் தேர்தலில் கொட்டப்பட்டு நளினி, கோகுலேஸ்வரன், சிவகங்கை மாவட்டம் ஒக்கூர் முகாமில் உள்ள மேரி ஷாலினி, திருநெல்வேலி மாவட்டம் கோபாலசமுத்திரம் முகாமில் வசிக்கும் ரவிச்சந்திரன் ஆகியோரும் பவானிசாகர், கன்னியாகுமரி முகாம்களைச் சேர்ந்தவர்களுமாக 10 பேர் வாக்களித்துள்ளனர். மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் இலங்கைத் தமிழர்கள் சட்டப்பூர்வமாகக் குடியுரிமைப் பெற முடியும் என்பதற்கான அனைத்து முயற்சிகளையும் தொடர்ந்து மேற்கொண்டு, அதில் முதல்கட்ட வெற்றியையும் பெற்றது திராவிட மாடல் அரசு.**




குடியுரிமையும் வாக்குரிமையும் இல்லாத மறுவாழ்வு முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களை உள்ளாட்சித் தேர்தலில் கவுன்சிலர் பதவிக்குப் போட்டியிடும் வேட்பாளர்கூட எட்டிப்பார்க்காத நிலை இருந்ததை மாற்றி, இலங்கைத் தமிழர்கள் நம் சொந்தங்கள் என்ற உணர்வுடன் முதலமைச்சரே மறுவாழ்வு முகாம்களுக்கு நேரில் சென்று, அவர்களின் நிலையைக் கேட்டறிந்து, வாழ்வாதாரத் திட்டங்களை நிறைவேற்றி, வாழ்வுரிமைக்கான சட்ட உதவிகளையும் வெற்றிகரமாக மேற்கொண்ட வரலாறு திராவிட மாடல் அரசுக்கே உரியது.

**மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் தொப்புள் கொடி உறவுகளான இலங்கைத் தமிழர்களைத் தொட்டில் கட்டித் தாலாட்டும் தாயுள்ளத்துடன் செயல்பட்டவர் கழகத் தலைவர். தமிழ் மண்ணை நம்பி வந்த தமிழர்கள் எவரையும் திராவிட மாடல் அரசு கைவிடாது என்பதை நிரூபித்தவர்.** வரவிருக்கும் நாடாளுமன்றக் கூட்டத் தொடரிலும் தமிழ்நாட்டில் உள்ள மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களின் குடியுரிமைக்காக நாடாளுமன்ற இரு அவைகளிலும் தி.மு.க. தொடர்ந்து குரல் கொடுக்கும். உச்சநீதிமன்றத்திலும் சட்டப்போராட்டத்தைத் தொடரும் என உறுதியளித்துள்ள கழகத் தலைவர் அவர்கள், மறுவாழ்வு முகாம் ஒவ்வொன்றிலும் அடிப்படைக் கட்டமைப்பையும், அங்கு வசிக்கும் இலங்கைத் தமிழர்களுக்கான வாழ்வாதாரத் திட்டங்களையும் தற்போதைய அரசும் தொடர வேண்டும் என வலியுறுத்தியிருக்கிறார். இந்த உண்மையான உணர்வு வேறு எந்தத் தலைவரிடம் வெளிப்படும்?



